09.09.2025

O.S.No.365/2014

வா.சா.2.திரு. பாரிதாசன், த.பெ. உலகன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**முதல் விசாரணை**

**சாட்சி I.A.No.6/2025 என்ற எண்ணில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் விசாரிக்கப்படுகிறார்.**

1. உலகன் என்னை சுவீகாரம் எடுத்ததை எந்த தேதியில், எந்த வருடம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனது சுவீகார தந்தை கையெழுத்து எப்படி செய்வார் என்றால் க.உலகன் என்று எழுதுவார். நான் மேலூர் அரசு கலை கல்லூரியில் B.A. படித்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படுவது எனது கல்லூரியின் மாற்று சான்றிதழ் நகல் என்றால் ஆமாம். மேற்படி, மாற்று சான்றிதழில் எனது தந்தை K. உலகன் என்று கையெழுத்திட்டுள்ளார் என்றால் ஆமாம். மேற்படி, மாற்றுச் சான்றிதழ் நகல் **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.14ல் உள்ள உலகன் சொல்லிக் கொண்ட வாக்குமூலம் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ள வாக்குமூலத்தில் உள்ள K. உலகன் என்ற கையெழுத்து எனது தந்தையுடையது தானா என்றால் இல்லை. வா.சா.ஆ.14 ஆவணத்தில் உள்ள K. உலகன் என்ற கையெழுத்து என்னுடைய தந்தை கையெழுத்து தான் என்றாலும், நான் வேண்டுமென்றே பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தந்தை எழுதிக் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் வாதி பெயருக்கு பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்து அது அவருடைய கையெழுத்து அல்ல. தாவா சொத்திற்கு தற்போது யார் பெயரில் பட்டா

உள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு தற்போது வாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் நான் கருங்காலக்குடியில் குடியிருக்கிறேன். எனவே, எனக்கு தெரியாது. எனது தந்தை க. உலகன் என்றும், K. உலகன் என்றும் கையெழுத்து போடுவார் என்றால் சரிதான்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. வா.சா.ஆ.14 ஆவணத்தில் வாதி பெயருக்கு கிரையப் பத்திரம் கொடுக்கப்பட்டுள்ளதாக துலங்கும்பட்சத்தில் எனது அப்பா வாதிக்கு கிரையம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதிக்கு எனது அப்பா இடத்தை பட்டா மாறுதல் செய்வதற்கு எனது அப்பா எதுவும் எழுதி கையெழுத்து போட்டு கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தைத் தவிர வாதிக்கு வேறு இடங்கள் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.140/2–வாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது தான் O.S.No.396/2012–என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் என்றால் சரிதான். O.S.No.396/2012–என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படுவது தான் O.S.No.396/2012–என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் என்றால் சரிதான். O.S.No.396/2012–என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் வட்டாட்சியர் எனக்கு வழங்கிய வாரிசு சான்றிதழ் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தகப்பனார் வாதிக்கு எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை:**</u>

3. எனது இரத்த வழி தந்தை பெயர் முத்தன் ஆகும். நானும், இரத்த வழி தந்தையான முத்தன் என்பரும் பேசிக் கொள்வோம்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.